தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	• திருவள்ளுவர் யாண்டு ௱௯௯௨	மலர்
௩௭	பிலவ, வைகாசி. 1961 மே, ஜூன்.	௨

பேராசிரியர் இரா. பெ. சேதுப்பிள்ளை அவர்களின் பெரும் பிரிவு

சொல்லின் செல்வரும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றவரும் தமிழ்ப் புரவலரும் ஆகிய ரா. பெ. சேதுப்பிள்ளை அவர்கள் 25-4-61 செவ்வாயன்று அரசினர் தலைமை மருத்துவமனையில் சென்னையில் மறைந்த செய்தி அறிந்த தமிழர் தாங்கொணாத்துயரிலாழ்ந்தனர். வளமார் தமிழ் வாழ்வு நடாத்திய நந்தம் செந்தமிழ்ச் சேது சாய்ந்தமை கேட்டுத் தமிழ் மக்களின் அகமும் முகமும் சோர்ந்தன. தமிழால் தமிழுக்காக வாழ்ந்த பேராசிரியரின் மறைவு கருதிச் சென்னையில் நிகழ்ந்த இரங்கற் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவரும், மாநகராட்சி முதல்வரும் (மேயரும்) கலந்து கொண்டனர். தமிழறிஞர் முன்னின்று கூட்டத்தை நடத்தினர். அன்று, சென்னை தன் ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்திற்று. மாநகராட்சி மன்றமும் நகராட்சி மன்றங்களும் பிள்ளையின் பெரும் பிரிவினை எண்ணிக் கலங்கின. பேராசிரியரின் மறைவிற்காக வருந்திய தமிழ் நிறுவனங்கள் பலவாகும்.

நெல்லையின் எல்லையிலாப் பெருமைகட்குத் தம்மையும் காரணமாக்கிக் கொண்ட பேராசிரியர், நெல்வேலி நகருக் கண்மையிலுள்ள இராசவல்லி என்னும் ஊரில் தாளாண்மையும் வேளாண்மையும் மிக்க தமிழ்க்குடி தழைக்க 1896-ஆம் ஆண்டில் பிறந்தார். பேராசிரியரின் பெற்றோர் பெருமாள் பிள்ளையும் சொர்ணம்மாளும் ஆவர். பாளையங்கோட்டைச் சேவியர் உயர்நிலைப்பள்ளியில் பயின்ற பின்னர், நெல்லை இந்துக் கல்லூரியில் இடைக்கலை (இண்டர்) வகுப்பை முடித்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப் (பி. ஏ.) பட்டம் பெற்றுப் பின்னர் அக்கல்லூரியில் ஆசிரியர் தொழில் புரிந்துகொண்டே சட்டக்கலைப் பட்டமும் பெற்றார்.

வழக்குரைஞராகச் சிறந்து விளங்கிய பிள்ளையவர்கள் நெல்லை நகராட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்போது இருபத்து மூன்றாண்டு இளைஞராயிருந்த டாக்டர் பிள்ளையவர்கள் பொதுப் பணியிலீடுபட்டுப் பெரும்புகழ்க் குரியவரானார்.

இங்ஙனம் சிறந்து விளங்கிய, இவர் அரசியலில் மேலும் திளைத்துவிடாமலிருக்கத் தமிழ்த் தாயின் தண்ணளியால் தடுத்தாட் கொள்ளப் பெற்றார். அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளரானார். அங்கு ஆறாண்டுகள் அரிய தமிழ்ப் பணி செய்தபின் 1936–இல் சென்னைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளராக அமர்த்தப் பெற்றார். திருவாளர்கள் கா. சுப்பிரமணியபிள்ளை சிவராமபிள்ளை ஆகியோரிடம் தமிழ் கற்ற டாக்டரவர்கள், விரிவுரையாளராய்ச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அடியெடுத்து வைத்துத் தமிழ்த்துறையின் முடியையும் பெற்றார்.

இங்ஙனம் நல்லாசிரியராய் நூலாசிரியராய் விளங்கிய டாக்டரவர்கள், கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரன்பராகவும் தமிழவேள் உமாமகேசுவரனாரின் உற்ற நண்பராகவும் வாழ்ந்தவராவர்.

பேராசிரியரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கக் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கூட்டம் 5-5-61 வெள்ளியன்று மாலை 5–30 மணியளவில் தமிழ்ப் பெருமன்றத்தில் சங்கத் தலைவர் திரு. **ச. சுயம்பிரகாசம்** பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தலைவர், தம் முன்னுரையில், சங்கத்திற்கும் பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கும் நீண்ட நாட்களாக இருந்த பெருந்தொடர்பினை விளக்கி அவர் புலவராயும் புரவலராயும் இசைபெற வாழ்ந்து செய்த தமிழ்த் தொண்டினைப் புகழ்ந்து அவர்தம் மறைவு சங்கத்திற்கும் தமிழகத்திற்கும் எல்லையற்ற வருத்தம் தருவதாகும் எனக் கூறினார். கூட்டத்தில் இரங்கல் உரை பலர் நிகழ்த்தினர்.

1. திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள்,

சேதுப்பிள்ளையின் நல்லியல்புகளையும் தமிழ்த் தொண்டையும் அவர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த அருஞ் செயல்களையும் எடுத்துக் கூறினார். 'சொல்லின் செல்வர்' எனும் சிறப்புப் பெயருக்கேற்ப அவர் மிக்க பெருமையுடன் விளங்கியதனைச் சான்றுகள் தந்து விளக்கினார். சேதுப்பிள்ளை வள்ளுவர், கம்பர், பாரதியார் முதலியோரிடம் கொண்டிருந்த ஈடுபாட்டினை எடுத்துக் கூறினார். பீடுநடையில் இனிய குரலில்

எடுத்தல் படுத்தல் அமையப் பேராசிரியர் வழங்கும் மேடைத் தமிழ் மிக உயர்ந்ததாகும். 'தமிழின்பம்' என்னும் நூலுக்குத் தாம் பெற்ற ஐயாயிரம் ரூபா பரிசையும் தமிழ் வளர்ச்சிக்கு வழங்கிப் புரவலராகும் பேறு பெற்றமை கூறிப் புகழ்ந்துரைத் தார்கள்.

2. புலவர் திரு. வி. அ. அரங்கசாமி அவர்கள்,

சேதுப்பிள்ளையவர்கள், தமக்கு அறிமுகமான எல்லா நிலையினருடனும் நட்பை மறவாமல் எளிய முறையிற் பழகிய பெருஞ் சிறப்பினைப் பாராட்டி இலக்கியத் துறையில் அவர்க்கு இருந்த ஈடுபாட்டால் "சிலப்பதிகார விளக்கம்," "ஆற்றங் கரையினிலே," "வேலும் வில்லும்" முதலிய நூல்களை இயற்றிய திறத்தை எடுத்துக் காட்டினர். பேராசிரியர் சங்ககாலப் புலவர்களாகிய கபிலர் பரணர் முதலியோரைப் போல் பெருமித வாழ்வு வாழ்ந்தார். "இரவலர் புரவலை நீயும் அல்லை, புரவலர் இரவலர்க் கில்லையும் அல்லர்" எனக் கூறிய புலவர்களைப் போல வீரவாழ்வு வாழ்ந்தார். 'ஊரும் பேரும்' என்னும் பெயருடைய பேராசிரியரின் நூல் தமிழ் நாட்டில் நல்ல தமிழ் வழங்கவேண்டும் என்னும் பேரவாவால் எழுந்ததாகும், எனப் பேசினர்கள்.

3. புலவர் திரு. தி. பாலசுப்பிரமணியன், அவர்கள்

பேராசிரியர் அவர்கள் தமக்கெனத் தனியே ஒரு தமிழ் நடை அமைத்துக் கொண்டார். அவர் தம் தமிழ்நடை தொடைநயமும் பெருமிதமும் வாய்ந்ததாகும். இன்றி யமையாக்காரணம் பற்றிச் சிறுபான்மை வேற்றுச்சொல் விரவுதலும் நிகழும். கா. நமச்சிவாய முதலியார்க்குப் பிறகு பெரும்புரவலராய்ப் பெருவாழ்வு வாழ்ந்தவர் தமிழ்ப் பேராசிரியர் சேதுப்பிள்ளையே ஆவர், எனவும் பேராசிரியர் தமக்குக் கிடைத்த சிறிய வருவாயைக் கொண்டு அரிதின் முயன்று சேமித்திருந்த ஐம்பதாயிரம் வெண்பொற்காசு களையும் தம் சேமிப்புக்குப் பெரிதும் துணையாயிருந்து தம்மை உயர்த்திய இருபெரும் பல்கலைக் கழகங்கட்கும் சமமாகப் பங்கிட்டு வழங்கினர். அவர்க்கு அமைந்திருந்த வருவாயினை எண்ணிச் சீர்தூக்கிக் கூறுமிடத்து அவரது கொடை பெருங் கொடையாகும் எனவும் மறைந்த பேராசிரியரின் இடம் நல்லவரும் வல்லவருமாகிய டாக்டா மு. வரதராசனரால் அணி செய்யப் பெறவிருப்பது பிள்ளையவர்களைப் பிரிந்து வருந்தும் தமிழ் மக்கட்கு ஆறுதல் அளிக்கும் நற்செய்தி ஆகும்,

4. திரு. அ. இராமமூர்த்தி அவர்கள்.

சேதுப்பிள்ளை, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் தொடர்ந்து இருபத்தைந்தாண்டுகள் பணிசெய்த பெருமகனாராவர். துணைவேந்தர் பேரறிஞர் டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியாரின் பெருமதிப்பிற்குரியவராய் அறுபத்தைந்தாண்டு நிரம்பும்வரை பணிசெய்யும் அரிய வாய்ப்பை மருத்துவராகிய துணைவேந்தரிடம் பெற்றது பேராசிரியரின் பெருமதிப்பிற்கும் அரிய உழைப்பிற்கும் சான்றாகும். டாக்டர் பிள்ளை இருபத்து மூன்றாண்டு இளைஞராயிருந்தபோதே நெல்லை நகராட்சியின் துணைத் தலைவராய் விளங்கியது வியந்து பாராட்டற்குரியதாகும். இத்தகைய இளைஞர் நகராட்சியிலிடம் பெற்றது தமிழகத்திலேயே முதல் நிகழ்ச்சியாகவும் இருக்கலாம். இவர்தம் மேடைத்தமிழ் மிக்க ஆற்றல் படைத்ததாகும். பேராசிரியர் தம் பெருமிதப் பேச்சுக்களாலும் நூல்களாலும் தமிழ் மக்களின் உள்ளங்களில் நிலையான இடம் பெற்றுள்ளார். முழுநிறை வாழ்வு வாழ்ந்த பேராசிரியர் நம் பாராட்டுக்குரியவராதலின் அவர் தம் பிரிவு வருந்தற்குரியதாகும், என விளம்பினார்கள்.

பின்னர்க் கூட்டத்தலைவர், பேராசிரியர் மறைவுக்காகப் பெரிதும் இரங்கும் தீர்மானம் ஒன்றைப் படித்தார்கள். கூட்டத்தினர் ஒரு நிமிடம் அமைதியாய் நின்று இரக்கத்தைத் தெரிவித்து அமைதியாய்க் கலைந்தது.

தொன்மைமிகு செந்தமிழின் சொல்லின் செல்வ!
தொடைநயஞ்சால் எழுத்தாளர் செம்மால்! எம்மோர்
நன்மையுறப் பணிபுரிந்த நல்லோய் நாட்டின்
நலிவகற்றத் தொண்டேற்ற பெரியோய் வாழ்வில்
மென்மையொடு விளங்கிதமிழ் வீறு கொள்ள
வேண்டிவளம் ஈந்துயர்ந்த சேதண்ணல் உன்
தன்மைதமிழ் நாடறிந்து போற்றுங் காலைத்
தனிவிடுத்திங் கெமைப்பிரிந்தாய் அந்தோ! அந்தோ!

ச. பர.

சிலம்பின் தொடக்கம்

K. S. மகாதேவன். M. A., BSC.

போராட்டத்தினை அகத்தே கொண்ட விறுவிறுப்பான கதையினையும், மேல் விளையும் நிகழ்ச்சிகட்கெல்லாம் வித்தாக அமையும் தொடக்கத்தினையும் பெற்றிருப்பதே நாடகத்தின் சிறப்பியல்பாகும் என்பது அறிஞர் தம் கருத்து. எனவே, நாடகக் காப்பியம் எனப் பேசப்படும் நம் சிலப்பதிகாரம் எந்த அளவிற்கு இவ்விலக்கணத்தினைத் தழுவிச் செல்கிறது என்று காண்பதும் சுவை தரும் ஒரு செய்தியாகுமன்றோ?

சிலம்பில் போராட்டம்.

சிலம்பொலி எழுப்பிய இளங்கோவடிகளார் ஏனைய உலகக் காப்பியங்களை அறியாதவர் அல்லர். சிலப்பதிகாரக் காப்பியத்தினை மற்ற உலகப் பெருங் காப்பியங்களோடு ஒப்ப வைத்துக் காண்பது போன்று அடிகளாரே,

தேவர் அசுரர் போர் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது. இராம இராவணம் போர் பதினெட்டு மாதங்கள் நடந்தது. நூற்றுவர்க்கும் ஐவர்க்கும் நடந்த போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. செங்குட்டுவனுக்கும் இமயத்து மன்னர்கட்கும் நடந்த போர் பதினெட்டு நாழிகையில் முடிந்தது.

என்ற பிற காப்பியச் செய்திகளை நமக்கு நினைவூட்டிச் செல்கின்றார். இவ்வுண்மையினை

"ஆரிய மன்னரைச்
செயிர் தொழில் முதியோன் செய் தொழில் பெருக
உயிர்த் தொகையுண்ட ஒன்பதிற் றிரட்டியென்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டு நீர் ஞாலம் கூட்டி யெண்கொள

என்ற அடிகளில் (நீர்ப்படை : 7-10) காணலாம். இளங்கோவடிகள் போன்ற ஒரு பெரும் புலவர் வெறும் 'பதினெட்டு' என்ற எண் ஒற்றுமைக்காகச் சிலம்புக் கதையினை எடுத்துச் சென்று உலகப் பெருங் காப்பிய வரிசையில் வைத்து மகிழ்வாரா? ஏனைய உலகக் காப்பியங்கட்கு இருக்கின்ற **பொது** அடிப்படை இளங்கோ கூறும் சிலம்பிற்கும் இருக்க வேண்டுமன்றோ?

இளங்கோவடிகளார் ஈண்டு ஒப்புமைக்காகக் கொண்டு வந்து காட்டும் ஒவ்வொரு காப்பியமும் **இரு வேறு பண்**

பாட்டிற்கு இடையே எழுந்த மோதலையே அடிப்படையாகக் கொண்டு எழுந்திருக்கின்றது !

அறவழி நின்றது அயோத்திப் பண்பாடு, மறவழிச் சென்றது இலங்கைப் பண்பாடு; இரண்டிற்கும் எழுந்த மோதலை மையமாகக் கொண்டுதான் இராமாயணம் சுழல்கிறது.

ஆணவத்தை வேராகக் கொண்டு வளர்ந்தவர் நூற்றுவர், பொறுமையைப் பூணாகக் கொண்டு திகழ்ந்தவர் பாண்டவர்; இருவருக்கும் இடையில் எழுந்த போராட்டமே மாபாரதமாக மலர்ந்தது.

தேவர்களும் அசுரர்களும் அடிப்படையிலே மாறுபட்ட பண்பாட்டினைக் கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்த செய்தி !

இத்தகைய உலகக் காப்பியங்கட்கு நம் சிலம்பு மட்டும் விதிவிலக்காகப் போய்விடுமா? இங்கும் இருபெரும் பண் பாட்டுக்கும் இடையில் எழுந்து மோதலே காப்பியத்தை நடத்திச் செல்கின்றது.

பொதியிலும் இமயமும்

காப்பியத்திற்குச் சிலம்பின் பெயரை இட்டழைத்த அழகினை எண்ணி எண்ணி இளங்கோவடிகளை அறிஞருலகம் வாழ்த்துகின்றது. ஆனால், இளங்கோவடிகளார் சொல்லிலே இருபொருள் வைத்துப் பேசும் சிறந்த நாடக ஆசிரியராக வும் கதை முழுவதும் காட்சி தருகின்றார்! சிலம்பு என்ற சொல் பெண்கள் அணியும் காலணியை மட்டும் குறிக்கும் சொல் அன்று; நிலையில் திரியாது நிமிர்ந்து நிற்கும் மலைகட்கும் இச் சொல் உரியதாகுமன்றோ? எனவே, சிலப்பதிகாரம் ஒரு வகையில் **மலையதிகாரமாகவே** தொடங்குகிறது! இருவேறு திசையில் எழுந்த இருபெரும் பண்பாட்டினை இருவேறு மலை யின் பெயரால் காப்பியத்தின் தொடக்கத்திலேயே இளங்கோ நம் கண்முன்னர்க் கொண்டுவந்து நிறுத்துகின்றார். ஒன்று தென்திசையில் தழைத்த பொதியில் பண்பாடு; மற்றது வட திசையில் வளர்ந்த இமயப் பண்பாடு. இவ்விரு பண்பாட்டில் எது உயர்ந்தது என்ற வேண்டாத ஆராய்ச்சியில் இளங்கோ வடிகள் இறங்கவில்லை! இரண்டும் இருவேறு இடங்களில் இருவேறு தட்ப வெப்ப நிலைகளில் உருவானவை எனவே இரண்டும் மாறுபட்டவை என்பது மட்டும் வரலாற்றில் இடம் பெற்றதோர் உண்மை. ஆனால், இரு பண்பாடுகளும் சான்

ஞோரின் கூட்டுறவால் தத்தம் நிலையில் நிலைத்து நின்று வாழும் என்பது துறவுள்ளம் படைத்த இளங்கோவடிகளாரின் நடு நிலைக் கருத்தாகும். இவ்வுண்மையினை,

" பொதியிலாயினும் இமயமாயினும்

....

நடுக்கின்றி நிலை இய தென்ப தல்லது
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
(மங்கல: 14, 17)

என்ற வரிகள் வலியிறுத்தும்

பூம்புகார்ப் போர்க்களம்:

ஆறு கடலில் புகுவதும், கடலலை கரையொடு உறவாடு வதும் எவரும் கண்டு களிக்கும் இன்பக் காட்சியே யாகும். தென்றல் ஒரு காலத்தில் இழைய, வாடை மற்றொரு காலத்தில் வந்து வருடுவதும் இயற்கையின் முறைமையே யாகும்! ஆனல் இத்தகைய உறவாடல்கள் ஒரு அளவோடு அமைதல் வேண்டும். அளவு கடந்தாலோ, ஆறும் கடலும் மோதி வெள்ளத்தையும், தென்றலும் வாடையும் மோதிச் சுழன்று புயலையும் உருவாக்கிவிடும். பண்பாட்டுக் கலப்பும் இத்தகையதே; அளவோடு இருந்தால் அதற்குப் பெயர் தோழமை; அளவுகடந்து ஒன்றை ஒன்று விழுங்குவது என்ற நிலை ஏற்பட்டு விட்டாலோ அது மோதலாக முற்றிவிடு கின்றது. இந்த நெருக்கடி நிலை இளங்கோக் காலத்துப் பூம்புகாரில் ஏற்பட்டு விட்டது என்பதனையே காப்பியத்தில் வரும் நிகழ்ச்சிகள் நமக்கு வலியுறுத்துகின்றன. காவிரி வெள்ளம் கடலில் பாய்ந்தது; கடலோதம் காவிரியை எதிர்த்து நுழைந்தது. புகார் மக்களைத்தழுவும் உரிமை எவர்க்கு என்பதில் தென்றலும் வாடையும் மாறி மாறிப் போராடி வந்தன; கலையைத் தாங்கிய நகர மக்கள் கடலை நோக்கி நாள்தோறும் படையெடுத்தனர்; அலையைத்தாங்கிய கடல் நாளுக்கு நாள் நகரைநோக்கி நகர்ந்து கொண்டிருந்து! இவற்றையெல்லாம் மக்கள் பொருட்படுத்தாமலே காலத் தைக் கழித்துக் கொண்டிருந்தனர். ஆனல், இருபெரும் மலைகளான இமயமும் பொதியிலும் மோதிப் புரண்டு பூம் புகாரைப் போர்க்களமாக மாற்றத் தொடங்கி விட்டபிறகு எளியமக்கள் நசுங்கி மடிவதைத்தவிர வேறு என்னசெய்ய முடியும்? சான்றோர்கள் முன் வந்திருந்தால் இம்மோதலைத் தவிர்த்திருக்கலாம்! சான்றோரை நம்பியே இளங்கோ வடிகளும் "பொதுவறு சிறப்பிற் புகார்" (மங்கலம்: 16) எனப் புகழ்ந்து வாழ்த்தினர்! ஆனல், பூம்புகாரில் சான் றோரின் பெருமை பழம் பெருமையாகப் போய்விட்டது!

பொதுமை அறுந்து ஏனைய நகரங்களைக் காட்டிலும் உயர்ந்திருந்த பூம்புகார் உண்மையிலேயே பொதுமை அறுந்து ஏனைய நகரங்களைவிடத் தாழ்ந்து விட்டது! இல்லாவிடில் "பதியெழு வறியாப்பழங்குடி கெழீஇய"... புகார் நகரத்துச் செல்வி எதற்காக "வாழ்தல் வேண்டி" மற்றொரு நகர்க்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது?

நீரும் நெருப்பும்

ஓரிசைக்குத்தான் ஒருவனால் ஆட முடியும்; இருவர் நின்று இருவேறு இசை எழுப்பினால் ஆடுகின்றவன் யார்க்கென்று ஆடுவான்? இத்தகைய குழப்பநிலைதான் பூம்புகாரில் இடம் பெற்றுவிட்டது. பொதியில் நீருக்குப் பெருமை தந்தது; இமயமோ நெருப்புக்குச் சிறப்புத்தந்தது. வெப்பம் மிகுந்த நாட்டில் வாழ்பவர் தண்மையையும், குளிர் நிறைந்த நாட்டில் இருப்பவர் வெம்மையையும் விழைவது எவராலும் மாற்றியமைக்க முடியாததொரு மனப் பண்பாகும்! எனவே, பொதியில் நல்லதைக் குளிர்ச்சியாகக் கண்டது; கெட்டதை வெப்பமாகக் கொண்டது. இமயமோ நல்லதை வெப்பமாகக் கண்டு கெட்டதைக் குளிர்ச்சியாகக் கொண்டது. விருந்தினரை அகங்குளிர்ந்து வரவேற்பது பொதியில் வழி வந்த தமிழர்க்கு இயல்பு. இமயப்பண்புடன் உறவுடைய (ஆங்கிலம் போன்ற) மொழியினருக்கு வெப்பமான வரவேற்பை நீட்டுவது (Extending warm welcome) இயல்பு. பொதியில் மொழியில் சுடு சொல் வெறுப்புக்கு அறிகுறி; இமயத்தின் மொழியிலோ குளிர்ந்த சொற்கள் (cold words) ஆறிப்போன அன்புக்கு அறிகுறியாகும்! இமயத்திற்கும் பொதியிலுக்கும் இவ்வளவு இடைவெளி இருந்தும் ஏனோ இவ்விரு பண்பாடுகளும் பூம்புகாரில் நெருங்கி மோதத் தொடங்கின!

தீ வழி நடந்த திருமணம்!

பொதியில் வழிவந்த தமிழ்மக்கள் நன்மை நாடும் திருமணங்களிலே தண்மைதரும் நன்னீரால் மணமக்களை நீராட்டினர். அதனையே திருமணத்தின் சிறப்பு நிகழ்ச்சியாகவும் கொண்டனர் இதனை அகநானூறு போன்ற (பாடல்கள் 86; 136) அருந்தமிழ் நூல்கள் நமக்கு அறிவிக்கின்றன. ஆனால், சிலம்பின் தொடக்க நிகழ்ச்சியாக அமைந்த கதைத்தலைவியின் திருமணத்திலோ, நீரின் தண்மையைக் காண்பதற்கு மாறாகத் தீயின் வெம்மையினைக் காண்கின்றோம்!

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீ வலம் செய்வது"

இமயப்பண்பாட்டின் படையெடுப்புச் செய்தியையே நமக்கு அறிவிக்கின்றது.

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

என்றபொதியில் மொழியிலே ஊறிப்போன தமிழ் உள்ளங்கட்கு, "தீ வலம் செய்வது......" மங்கலமாகவோ, திருமணக் காலத்தில் நினைக்கக்கூடிய ஒரு நல்ல நிகழ்ச்சியாகவோ தோன்றாமல் போவதில் வியப்பதற்கொன்றும் இல்லை.

"இது தமிழ் நூல் முறைக்கு மாறுபடுவதாயிற்று" என்கின்றார் திரு. மு. சண்முகனார் B.A. (Hons). அவர்கள், சிலப்பதிகாரக் கட்டுரைகள் என்ற நூலில். "...'தீ வலம் செய்வது' என்ற முறை இவர் (இளங்கோவடிகள்) காலத்தே தோன்றி விட்டது" என்று இரங்குகின்றார் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை யவர்கள் (சிலப்பதிகாரச் சுருக்கம். பக்கம்—61).

ஆம், பண்டும் பண்டும் தமிழகத்து மணமக்கள் நடந்து சென்ற நேர்வழி சிதைய, ஊர்ந்து வந்த இமயத்தின் மறை வழியிலே காப்பியத் தலைவர்கள் செலுத்தப்படுகிறார்களே என்ற இரக்கமும் அச்சமும் நமக்கும் எழவே செய்கின்றன. மேலும், இப் புதுமணம் பற்றி முடிவு செய்தவர் யார் என்று பார்க்கும்போது

"அவரை,
இருபெருங் குரவரும் ஒரு பெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர்........" (மங்கல: 40-43)

என்று அறிந்து ஏமாற்றமடைகின்றோம். வாழ்க்கையில் பங்கு கொள்ள இருக்கும் மணமக்கள் இத் திருமணத்தை விரும்பி விழையவில்லையா? பெற்றோர்களால்

"பொருள் விரும்பிக் குலம் விரும்பிப் பொலம் விரும்பிச்"

செய்யப்பட்ட திருமணந்தான இது! இந்தத் திருமணத்தை விரும்பிப் பாராட்டியவர்தாம் யார் என்ற கேள்விக்கு "மாநகர்க்கு ஈந்தார் மணம்" (மங்கல: 44) என்று வருகின்றது விடை, இது ஊரார் மெச்ச நடந்த திருமணம் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது! இத்தகைய மணத்தால் ஒன்றுசேர்க்கப்பட்ட மணமக்கள் தொடர்ந்து இணைபிரியாமல் வாழ்வார்களா? இத்தகைய நம் உணர்ச்சியினை அறிந்து கொண்டவர்போல இளங்கோவடிகளாரும் கதைத் தலைவியை

நோக்கிக் "காதலன் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக" என எச்சரிக்கும் குரலில் வாழ்த்திச் செல்கின்றூர்!

மேல் விளைவுகள்.

இத் திருமணம் பற்றிக் குறிப்பிடும் திரு. மார்க்கபந்து சர்மா M. A. அவர்கள் (சிலப்பதிகார இரசனை, பக்கம் 45) "கண்ணகியின் பிற்கால வாழ்க்கையில் அவள் அடைந்த இன்னல்கட்கெல்லாம் காரணமான.........திருமணம்" என்று கூறுகின்றூர். ஆனல், கண்ணகி அடைய இருக்கும் இன்னல்களையன்றி, அவள் எதிர் காலத்தில் நடத்த இருக்கும் உரிமைப் போராட்டங்களும் இத் திருமணத்தைக் காணும் பேரதே நம் மனத்திரையில் வந்து நிழலிடுகின்றன.

பழக்கத்திற்கும் பண்பிற்கும் மாருக நடந்த இத்திருமணம் மணமக்களை எவ்வளவு காலந்தான் இணைத்து வைக்கும் என்ற ஐயம் எழுகின்றது! கோவலன் விரைவில் "வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறக்கும்" காட்சி இங்கு நிழலோவியமாகத் தெரிகிறது! "பெருங் குணத்துக் காதலாள்" என்று பேசப்படும் கண்ணகி இன்று காலமாறுபாட்டால் இமயத்து வழியிலே இழுத்துச் செல்லப்பட்டாலும் விரைவில் "பீடன்று" (கனைத்திறம்–64) என அதனை விடுத்துத் தமிழர் தம் பெருங் குணத்து வழியே மீள்வாள் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது.

இன்று மறைவழித் தோன்றுங் கதைத் தலைவியை வலம் வரும்படி ஏவல்கொண்ட இதேதீ, ஒரு நாள் அவள் முன் தலை வணங்கி நின்று "மாபத்தினி" (வஞ்சினமாலை–50) என்றழைத்து ஏவல் கேட்கும் என்ற எண்ணமும் நமக்குப் பிறக்கின்றது.

பொதியில் அறியாத வருண அடிப்படையிலே இன்று கதைத் தலைவியின் திருமணம் நடந்தாலும் இம் மணப் பெண்ணே பின்னர் வருணைச்சிரம அடிப்படையில் நாட்டு மக்களைப் பிரித்து வைத்திருந்த "நாற்பால் பூதமும் பால் பால் பெயரக்" (அழற்படு: 108) காரணமாக இருப்பாள் என்ற உணர்வும் நமக்கு எழுகின்றது!

இமயப் பண்பினை வெற்றி காணும் இக் கண்ணகியின் போராட்டத்தினைத் தொடர்ந்து நடத்த

"இமயத்து,
வானவர் மருள மலைவில் பூட்டிய" (காட்சி: 1;2)

தமிழ் மன்னன் ஒருவன் முன் வாராமலா போய்விடுவான் என்ற எண்ணமும் நம் உள்ளத்தில் முகிழ்க்கின்றது.

இனி, எல்லாவற்றிற்கும் மேலாக, இமயத்தின் மோதலால் இன்னல் பலகண்ட இப்பொதியிற் செல்வி இறுதியில் "இமயச் செல்வரைச் சிமயச் சென்னித்,தெய்வம்" (நடுகல்: 226–7) என்று இமயவரேயன்றி உலகவரும் பாராட்டும் நிலையினை எய்தத்தான் போகிறாள் என்பதும் தெரியவே செய்கிறது!

சிறந்ததோர் அவலம்?

இவ்வாறெல்லாம் நாம் எண்ணும் போதே சிலம்பின் இத்தொடக்கம் இன்ப முடிவிற்கு (Comedy) வழி கோலுகின்றதா, அல்லது துன்ப முடிவிற்கு (Tragedy) வழி வகுக்கின்றதா என்ற கேள்வியும் முந்துகின்றது. பொதியில் பண்பு இமயத்தின் தலையிலே என்றும் நின்றாளிருந்து கொண்டிருந்தது என்று கதை முடிந்தால் அதனை இன்ப முடிவு என்று கொள்ளலாம். அவ்வாறன்றித் தோற்றார் பண்பு வென்றார் பண்பாட்டினை விழுங்கியது என்ற நிலையில் கதை முடிந்தால் அதனைச் சிறந்ததோர் அவல முடிவு என்று தான் அழைக்க வேண்டும்! 'அவிசொரிந்து ஆயிரம் வேட்டல்' இமயப்பண்பாடு; ஒன்றன் உயிர் செருத்து உண்ணமை பொதியில் பண்பாடு. சிலம்பின் முடிவிலே வேள்வித்தீயின் புகையினையும் காண்கிறோம்; "ஊனூண் துறமின், உயிர்க் கொலை நீங்குமின்" (வரந்தரு: *189*) என்ற தமிழ் ஒலி யெழுவதையும்! கேட்கின்றோம்! எனவே, அவரவர் காண்பதையும் கேட்பதையும் சீர்தூக்கிப் பார்த்துக் கதையின் முடிவை உணர்ந்து கொள்வார்களாக!

காண்பார்கள் நோன்பென்னை?

எது எப்படி முடிந்தாலும் இளங்கோ அருளுகின்ற காப்பியத்தின் தொடக்கம் மறக்க முடியாத வகையில் அமைந்து விட்டது. ஆம்! அதிர்ச்சிக்குக் குழப்பத்திற்கும் காரணமாக அமைந்த அந்தப் புது முறைத் திருமணம்! அதனை அருகிலிருந்து கண்ணால் காணநேர்ந்த அந்தத் தலை முறைத் தமிழர்களை என்ன தவத்தைச் செய்தார்கள்? என்று நாம் சொல்வது? நாமும் இளங்கோவடிகளாருடன் நின்று

சாலியொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கள் நோன்பென்னை?

(மங்கல: 51-3)

என்று கேட்பதனைத்தவிர வேறு என்ன செய்வது? இக்கேள்விக்கு விடை வேண்டுமானால், கதை முழுவதும் தொடர்ந்து சென்று, மணத்தைக் கண்டவருள், பிரிந்தோர், துறந்தோர், மதம் மாறியோர், இறந்தோர் போன்றவர்களின் தொகையினை எண்ணிய பின்புதானே கூறமுடியும்?

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்

ந. மு. கோவிந்தராய நாட்டார்

சார்வரி, தைத்திங்கள் 'தமிழ்ப் பொழிலில்' யான் மேற் குறித்த குறளுரையைப்பற்றி எழுதிய கட்டுரையைப் படித்துப் பார்த்த என் நண்பர்களிற் சிலர் கட்டுரைக் கருத்தை ஒப்பாதவர்போல் சில ஐய வினாக்களை எழுப்பினர். இவை களுக்கு விடையளிப்பதே இக்கட்டுரையின் பொருளாகும்.

காந்தியடிகளுக்குத் தகாத மகன் தோன்றியமையையும், தகாதவர் சிலருக்கு நன் மக்கள் தோன்றியுள்ளமையையும், சிலருக்கு மக்கட்பேறே இல்லாமையையும் சுட்டி, இக்குறளில் உள்ள 'எச்சம்' என்ற சொல்லுக்கு 'மக்கள்' என்றபொருள் பொருந்தாமையை இவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். சிலர் தம் கொள்கை மீதுள்ள பற்றின் மோகத்தால் துறவி களுக்கு மக்கட் பேறின்மையையும் சுட்டுகின்றனர்!

தைத்திங்களில் யான் எழுதிய கட்டுரையை, "தக்கார் தகவிலார்க்கு நன்மக்கள் உண்மையும் இன்மையும் பெரும் பான்மை பற்றியென்பதும், நடுவு நிலைநிற்கும் இல்லறத்தான் தன் மக்களை நல்லாற்றிலுய்க்கும் கடப்பாடுடையவன் என்பதும், தகவிலார்க்கு நன்மக்கள் உளராதல் போன்ற இம்மை நிகழ்ச்சிகளுக்கு உம்மை வினை ஏதுவாகும் என்பதும் ஒருவாறு விளக்கப்பட்டமை யுணர்க" என முடித்துள்ளேன். இம்முடிவை ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு, தக்கார்க்கு நன் மக்கள் இன்மைக்கும், தகவிலார்க்கு நன்மக்கள் உண்மைக்கும் உரியகாரணம் விளங்காமற் போகாது. காந்தி யடிகளுக்கு நன்மக்களும் இருந்தனரே என்பதை இவர்கள் சிந்திப்பார்களாக.

நிற்க, தைத்திங்கள் கட்டுரையுள், "குறளொன்றின் உண்மைப் பொருள்காண கற்றுவல்லார் கண்டநெறி, அக்குறள் எப்பாலது, எவ்வியலது, எவ்வதிகாரத்தது என்றெல்லாம் ஆய்ந்து முடிவு செய்தலாகும்" என எழுதி யுள்ளேன். இந்நெறி இன்றியமையாத நெறியாம். இதனைப் பின்பற்றுமையாற்றான் திருக்குறளுக்குப் பொழிப்புரை யெழுதி வெளியிட்டுள்ள சில அறிஞரும் பல குறட்பாக் களுக்கு புத்துரை கூறுவதாக கருதி ஆசிரியரின் கருத்தறியாது இடர்ப்பட்டுள்ளனர். இக் குறளுரையிலும் இவ்வாறே இடர்ப்பட்டு 'எச்சம்' என்ற சொல்லுக்கு வறிதே

'புகழ்' என்றுரை யெழுதிப் போயினர். தமிழ் அறிஞர்களே இவ்வாறு இடர்ப்படும்போது ஏனையோரைப் பற்றிக் கூறல் வேண்டுமோ?

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையால்

என மதுரைத்தமிழ் நாகனுர் என்ற புலவர் கூறியாங்கு ஆசிரியர் திருவள்ளுவனுர் எல்லாப் பொருளையும் ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளில் அடக்கிக் கூறியுள்ளார். ஆயின் எவ்வாறு? வரையறையின்றி மனம்போன போக்கில் வாளா கூறியுள்ளாரா? ஆசிரியர் எத்துணைப் பேரறிஞ ராயினும் தாம் உலகவர்க்கு அறிவுறுத்த நினைத்த அளவிற் கடங்காப் பொருள்களை யெல்லாம் வரையறைப் படுத்தாமல் கூற வியலுமா? யான் எழுதுகின்ற இச்சிறு கட்டுரையினையும் பொருள் நோக்குடன் நிரல்படப் பிரித்தெழுதாவிடின் படிப் போர் இதன்பொருளைச் செவ்விதின் புரிந்து கொள்ள வியலுமா? ஆசிரியரின் இத்திறத்தை அரசில்கிழார் என்ற புலவர்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்

என்ற வெண்பாவில் விதந்து விளக்கியுள்ளார். பலவகை யாகப் பரந்து கிடக்கும் பொருளை யெல்லாம் உலகவர் எளிதில் அறியும் வண்ணம் வெவ்வேருகப் பிரித்து அஃதஃது அதனதனது வகையிற் சேரும்படி சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரித்துச் சொல்லுதல் வல்லவர் வள்ளுவ ரல்லா தொருவருமில்லை, என்பது இவ்வெண்பாவின் பொரு ளாகும். ஒரு நூலுக்கு வரையறையான பாகுபாடு இன்றி யமையாத தென்பதனை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

என்ற குறட்பாவாலும் நாம் உய்த்துணரலாம். இஃது பொருட் பாலில் முதல் இயலாகிய அரசியலில் மூன்ருவது அதிகார மாகிய 'கல்லாமை' யின் முதல் குறட்பா. 'அறிவு நிரம்புவதற் கேதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையேறி ஒன்றைச் சொல்லுதல் கோடுகீறி அதனுல் இடம் வகுத்துக் கொள்ளாது வட்டாடினுற்போலும்' என்பது இதன் பொரு ளாகும். இப்பொருளும் உவமையும் இரண்டு உண்மைகளைப்

புலப்படுத்துகின்றன. முதலாவது, நூல்களைக் கல்லாது அவையேறிப் பேசுதல் எவ்வாறு தவறோ அவ்வாறே திருக்குறள் போன்ற அரும் பெரும் நூலுக்கு உரையெழுதுவதும் தவறாகும். இரண்டாவது, அரங்கின்றி வட்டாடுதல் எவ்வாறு வறிதாய் முடியுமோ அவ்வாறே திருவள்ளுவர் போன்ற பேரறிஞரும் வரையறை செய்து கொள்ளாது நூலெழுதின் அந்நூல் வறிதாய் முடியும் என்பதாம்.

ஆகலினன்றே திருக்குறளின் பால், இயல், அதிகாரப்பாகு பாட்டை அடிப்படையாகக் கொண்டு துறைபோகக்கற்ற பரிமேலழகர்போன்ற உரையாசிரியர் அதற்கு உரை வரைந்துள்ளனர். பரிமேலழகர் 'அரங்கின்றி' என்ற குறட்பா வினுரையில்—'தானிரம்புவதற்கேது வாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையின்கணொன்றனைச் சொல்லுதல்' என்னும் உரைப்பகுதிக்குச் சிறப்புரையாக, 'சொல்லும் பொருளும் நெறிப்படா வென்பதாம்' எனக்கூறி முடித்துள் ளார். இக்கருத்தை உரையெழுதப் புகுவாரெல்லோரும் உளத்தில் ஆழப்பதித்தல் வேண்டும்.

திருக்குறள் உலகிற்கே பொதுவான நீதி நூல். ஆகலின் ஒவ்வொரு குறட்பாவும் கூறும் நீதி உலக மக்கள் எல் லோருக்கும் பொருந்தும். எனினும் துறவறவியலிற் கூறப் பட்டுள்ள நீதிகளிற் பல துறவறத்தார்க்கே உரியனவாகவும் ஏனையோருக்குப் பொதுவானவையாகவும் உள்ளன. அரசியலிற் கூறப்பட்டுள்ள நீதிகள் அரசருக்குச் சிறப்பாகவும் ஏனையோருக்குப் பொதுவாகவும் பொருந்தும். இவ்வாறே இல்லறவியலிற் கூறப்பட்டுள்ளவை இல்லறத்தார்க்கு சிறப் பாகவும் ஏனையோருக்குப் பொதுவாகவும் பொருந்தும். அருளுடைமை, புலான் மறுத்தல், கொல்லாமை, வாய்மை போன்ற அதிகாரங்களிற் கூறப்பட்டுள்ள நீதிகள் உலக மக்கள் எல்லோருக்கும் பொருந்துவன வாயினும், அவைகள் துறவிகளுக்கு இன்றியமையாச் சிறப்பினையுடையனவாம். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், நடுவு நிலைமை, புறங்கூறாமை, ஒப்புரவறிதல் முதலிய அதிகாரங் களிற் கூறப்பட்டுள்ள நீதிகள் எல்லோருக்கும் பொருந்துவன வாயினும் இல்லறத்தார்க்கு அவை இன்றியமையாச் சிறப்பினை யுடையனவாம். கல்வி, கேள்வி, சுற்றந்தழால் முதலிய அதிகாரங்களிற் கூறப்பட்டுள்ள நீதிகள் எல்லோருக்கும் பொருந்துவன வாயினும் அவை அரசருக்கு இன்றியமையாச் சிறப்பினை யுடையனவாம். இனி இவற்றை யெல்லாம் உள்ளத்திற்கொண்டு 'தக்கார் தகவிலர்' என்ற குறட்பாவில் உள்ள 'எச்சம்' என்ற சொல்லுக்குப் பொருள் காண வேண்டும்.

ஆசிரியர், இல்லறவியல் முதல் இரண்டதிகாரத்திலும் இல்வாழ்வானையும், அவன் வாழ்க்கைத் துணைவியையும் பற்றிக் கூறியபின் மூன்றும் அதிகாரத்தில் அவர்களுக்கு மக்கட்பேற்றின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார். இரண்டாம் அதிகாரத்தின் இறுதியிலுள்ள

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு

என்னும் குறட்பாவால் ஆசிரியர் மூன்றும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்து அதனை

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற என்னும்

குறட்பாவால் தொடங்குகிறார். இல்வாழ்வானுக்கு அறிய வேண்டியன அறியும் மக்கட்பேறே பேறு. அவனுடைய பிற பேறுகளை யாம் மதியோம் என்று ஆசிரியர் கூறுவாராகுல் அறிவறிந்த மக்கட்பேற்றின் சிறப்பை யாம் வேறெங்ஙனம் கூறவல்லேம். ஆசிரியர் 'யாம் என்ற தன்மைப் பன்மையை, 'யாமெய்யாக்கண்டவற்றுள்,' 'மக்களே போல்வர்' என்ற் குறட்பாக்களிலும் ஆண்டுள்ளார். 'இரப்பன் இரப்பாரை யெல்லாம்' என்ற குறட்பாவில் தம்மை தன்மை யொருமையிற் சுட்டிக் கொள்கின்றார். இத்தன்மை விதப்பால் இக்குறட்பாக்களின் பொருள் மிக வலியுறுதலைங் காண்க. ஆகவே ஆசிரியர் கருத்தில், இல்லறத்தார்க்கு நன்மக்கட்பேறு மிக இன்றியமையாதது என்பது பெறப்படும். 'எழுபிறப்பும் தீயவைதீண்டா' என்ற இரண்டாம் குறட்பாவும் இக்கொள்கையினை வலியுறுத்தும். நன்மக்கட்பேறு பெறாத இல்லறத்தார் குறையுடையவர் என்பது ஆசிரியர் கருத்தாகும் என்பதனை அருத்தாபத்தியாற் கொள்ளவேண்டும். இதனாலன்றோ மக்கட்பேறு பெறாதவர் அப்பேற்றிற்காக தவங்கிடந்த வரலாற்றை யெல்லாம் நாம் நூல்களின் வாயிலாகக் கேட்கின்றோம். இக்காலத்தும் மக்கட்பேறில்லாத பெற்றோர் கோயில் குளங்களுக்குச் சென்று வழிபாடு செய்தும் மூழ்கியும் தவங்கிடத்தலைப் பார்க்கின்றோம்.

இனி, இல்லறவியலை, இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், முதலிய இருபது அதிகாரங்களில் முடித்துள்ள ஆசிரியர் இறுதி அதிகாரம் ஒழிந்த பத்தொன்பது அதிகாரங்களில் ஒரு குறட்பாவிலாவது இல்லறத்தான் புகழ் நிலை நிறுத்தவேண்டிய கடப்பாட்டைப்பற்றிக் கூறிற்றிலர். ஆனல் இப்பத்தொன்பது அதிகாரங்களில் கூறிப் போந்த பொருட்கெல்லாம் முடிவைத்தாற்போல இருபதாம் அதிகாரமாகிய 'புகழ்' என்பதனை

இறுதியில் நிறுத்தியுள்ளார். புகழ் குறித்து ஓர் அதிகாரத்தையே ஆசிரியர் கூறி வைத்தது யாது கருதி என்பதனை அறிஞராயினர் சிந்தித்தல் வேண்டும். இவ்வதிகாரத்திலுள்ள ஒவ்வொரு குறட்பாவும் புகழ் ஒன்றையே குறியாகக் கொண்டுள்ளதென்பதனை ஓர்தல் வேண்டும். இசைபட வாழ்தல், ஈவார் மேனிற்கும் புகழ், உயர்ந்த புகழல்லால், நீள் புகழ், தோன்றிற் புகழொடு, புகழ்படவாழா தார், இசை, இசையிலா, இசையொழிய, ஆகிய தொடர்களை நோக்குக. மேலும் 'எச்சம்' என்ற சொல் புகழ் என்ற பொருளில் 'இசையெனும் 'எச்சம்' என்று விதக்கப்பட்டமையால், விதக்கப்படாத நடுவு நிலைமை என்ற அதிகாரத்திலுள்ள 'எச்சம்' என்ற சொல் மக்களையே குறிக்கின்றதென்பதனை யுன்னுக.

> எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
> நச்சப் படாஅ தவன்

என்ற குறளில் உள்ள எச்சம் என்ற சொல் ஐயத்திற்கிடனின்றி புகழ் என்ற பொருளைத் தாங்கி நிற்கின்றது. இஃது ஒழிபியலில் 'நன்றியில் செல்வம்' என்ற அதிகாரத்தில் வந்துள்ளமையால் துறவிகள் ஒழிந்த எல்லோருக்கும் பொருந்துவதாகும். 'செல்வத்தைப் பெற்றிருந்தும் அதனைத் தானும் பயன்படுத்தாது பிறருக்கும் கொடாது வாழ்பவன் தனக்குப் பின் எதனை விட்டுச்செல்வானோ, தெரியவில்லை' என்பது இவ்வதிகாரத்தின் முடிந்த பொருளாகும்.

'நடுவுநிலைமை' என்ற அதிகாரம் இல்லறவியலில் அமைந்துள்ளதால் அவ்வதிகாரத்தில் அடங்கியுள்ள

> செப்ப முடையவ னாக்கம் சிதைவின்றி
> எச்சத்திற் கேமாப் புடைத்து

> தக்கார் தகவில ரென்பதவரவர்
> எச்சத்தாற் காணப் படும்

என்ற இரு குறட்பாக்களிலும் வந்துள்ள 'எச்சத்திற்கு' 'எச்சத்தால்' என்ற சொற்களுக்கு 'வழியினர்க்கு' 'மக்களால்' என்று பொருள் கொள்வதே நேரிதாகும். மேலும் இவை ஆணையிற்கிளத்தல் போன்ற பொருளுடைய குறட்பாக்கள். இல்லறத்தானை நோக்கி, "நடுவுநிலைமை தவறாதே, தவறுவாயாயின், நின் செல்வம்—நின் மக்களையும் வழியினரையும் சென்றடையாது; நினக்கு நன்மக்கட் பேறுண்டாகாது" என்று ஆசிரியர் ஆணையிற் கூறுவதுபோல் இவை அமைந்துள்ளன. ஆகையின் 'எச்சத்தால்' என்ற சொல்லுக்கு, 'புகழால்' எனப் பொருள் கூறுபவர் ஆசிரியரை, கூறியது கூறல் என்ற குற்றத்திற்காளாக்குபவர் ஆவர் என்பதறிக.

நிற்க, மக்கட் பேறில்லாதாரை, தக்கார், தகவிலார் என்று அறிதல் யாங்ஙனம்? மணவாழ்க்கையே இல்லாதாருக்கு மக்கட் பேறில்லையே என்று கூறுவது பெரும் பேதமை. இல் வாழ்க்கை யுடையாரில் மக்கட் பேறில்லாதாரைப் பற்றியே நாம் கருத வேண்டும். ஆசிரியர் கருத்தில் நன் மக்கட் பேறில்லாதார் குறையுடையவர்களே என்பதனை முன்பு கண்டோம். எனினும் மக்கட் பேறுள்ளவர்களைக் குறித்தே இவ்விரு குறட்பாக்களையும் ஆசிரியர் கூறி வைத்தனர். மேலும் மக்கட் பேற்றையே நடுவுநிலைமையை அளக்கும் ஒரே அளவு கருவியாக ஆசிரியர் கொண்டார் என்பது தவறாகும். இதனை இக்குறளுக்கு அடுத்து வரும்

> கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
> கோடாமை சான்றோர்க் கணி

என்ற குறள் வலியுறுத்தும் 'முன்னைத் தீவினையாற் கேடும், நல் வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன. அவ்வாற்றை யறிந்து அவைகாரணமாக நடுவு நிலைமை தவறாமையே அறிவால் நிரம்பியவர்க்கு அழகாகும்' என்பது இதன் பொருளாகும். தக்கார்க்கு தீமக்கள் உண்மைக்கும், தகாதார்க்கு நன்மக்கள் உண்மைக்கும் காரணம் இக் குறட்பாவில் அமைந்து கிடத்தலையோர்க. இதனாலன்றே முன்னைக் கட்டுரையுள், 'உண்மையும் இன்மையும் பெரும்பான்மை பற்றி' என யான் எழுதியுள்ளதும் என்பதறிக. மேலும் இல்லறத்தான் நடுவுநிலையில் நிற்க வேண்டிய இன்றியமையாக் கடப்பாட்டை ஆசிரியர் இவ்வதி காரத்தின் ஏனைய குறட்பாக்களில் பல்வேறு வகைகளில் வலியுறுத்தியுள்ளமை காண்க.

இதுகாறும் எடுத்துக் காட்டியவாற்றான், குறட்பா வொன்றின் பொருளை நூலின் பால், இயல், அதிகார அடிப் படையில் முன்பின் முரணாதவாறு காண வேண்டுமென்பதும், ஆசிரியர் இல்லறவியலில் பத்தொன்பது அதிகாரங்களில் இல்லறத்தான் கடமைகளைப் பற்றிக் கூறி இறுதியான இருப தாம் அதிகாரத்தில் இல்லறத்தான் புகழ் நிலை நிறுத்த வேண்டிய கடப்பாட்டைப் பற்றிக் கூறியுள்ளார் என்பதும், நடுவுநிலைமை என்ற அதிகாரத்தில் வரும் எச்சம் என்ற சொல் லுக்கு மக்கள் என்பதே பொருள் என்பதும், நன்மக்கள் உண்மையும் இன்மையும் பெரும்பான்மை பற்றியென்பதும், இல்லறத்தானுக்கு நன்மக்கள் பேறே பேறு என்பதும், நன் மக்கட் பேறில்லாதார் குறையுடையவர்களே என்பதும், நன் மக்கட் பேறே நடுவுநிலைமையை அளக்கும் ஒரே அளவு கருவி யன்றென்பதும் ஒருவாறு விளக்கப்பட்டமை யுணர்க.

தமிழ் நாடகம்

தி. நா. அறிவு ஒளி

கற்பனை நாடகங்கள் தமிழிலேயே எண்ணப்பட்டுத் தமிழுக்காகவே எழுதப்பட்டு, தமிழகப் பண்பாட்டைக் காத்து, வளர்த்து வலிமையூட்டக் கூடியவைகள் தாம் 'தமிழ் நாடக இலக்கியங்கள்' என்ற சிறப்புக்குரியவையாகும்.

இலக்கியத் தகுதி மிக்க நாடகங்கள் எழுதுவதற்கு முதலில் வேண்டுவது பிறவியிலேயே அமைந்த 'இலக்கிய உணர்வா'கும். இரண்டாவது இலக்கிய அறிவு பெற வேண்டும். இவை நிறைவுறப் பெற்றபின் 'இலக்கியப் பண்பாடு' அடைதல் வேண்டும். இத்தகு திறமையாளர்கள், 'நாடக மரபு,' 'நாடக அடைவு,' 'நாடகவியல் அறிவு,' 'மொழி மரபு,' 'மொழி வரலாற்றறிவு,' 'மொழி நுட்ப அறிவு,' 'சொற்றிறன் தேர் புலமை,' 'உளநூல் நுண்ணறிவு,' 'இலக்கிய மரபு,' 'உலகியல் அறிவு,' 'மெய்யுணர்வு,' 'கலைச் சுவை துய்க்கும் மேன்மை யுணர்வு,' 'புதுமை ஆர்வம்,' 'சீர் திருத்த மனப்பான்மை,' 'விழுமிய எண்ணங்களை எண்ணும் ஆற்றல்,' 'கற்பனை வளம்,' ஆகிய பொதுத் தகுதிகளும்—சிறப்புத் தகுதிகளும் பெற்றபின் நாடக இலக்கியங்களைப் படைத்தால்; அவை காலம் வென்று வாழும்; புகழ் பெறும்.

'ஏனோ தானோக்கள்,' 'புகழேணியில் தூக்கிவிடப்பட்டவர்கள்,' 'தானும் ஏதேனும்' எழுத வேண்டும் என்ற ஏக்கம் பிடித்த திறனில்லாதோர் ஆகியவர்கள் இன்று நாடகாசிரியர்களாய், எழுத்தாளர்களாய், புனைகதையாசிரியர்களாய், கவிஞர்களாய்த் திரிகின்றனர். தமிழின் தவக்குறையை எவ்வண்ணம் பழிப்பதென்றே புரியவில்லை.

தமிழ் நாடக இலக்கியத்துக்கு இலக்கணமோ, மரபோ வகுக்கும்போது, ஆங்கில, வடமொழி இலக்கணங்களைக் 'கண் மூடித் தன்மையாகப்' பின்பற்றி மொழி பெயர்ப்பதோ, தழுவுவதோ தவறான பயனையே தரும். இத்தகு மொழிபெயர்ப்பாலும், தழுவல் குறைகளாலும்தான் சில துறைகள் இலக்கியச் சிறப்போடு வளரவில்லை. தமிழ் மரபு தமிழுக்கே உரியது. உலகில் வேறு எம் மொழிக்கும் இல்லாத சிறப்புக்கள் கொண்டது தமிழ் மரபு. ஆகவேதான் பிறமொழி இலக்கணங்களின் 'வலிய திணிப்பு' தமிழிலக்கிய வளத்திற்கு ஒரு சிறிதும் உதவவில்லை.

தமிழறிஞர்களே தமிழ் மரபுக்கேற்ற புதிய கலைத்துறை, இலக்கியத்துறை இலக்கணங்களைப் புதுமைக்கேற்ப, பழமையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளல் நல்லது. அவ்விலக்கண அமைப்பு தமிழில் மேலும் மேலும் 'நாடக இலக்கியங்கள்' வளர்வதற்குத் துணை செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

நாடகங்கள் ஒரே கதைப் போக்கில் அமையும் நிலை மாற வேண்டும். பல புதிய முறைகளையும், கலை நுணுக்கங்களையும் நாடகாசிரியர்கள் கையாண்டு, நாடகக் கதைகளை உருவாக்க வேண்டும். 'புதிய முறைகள்' என்ற பெயரில் "திகிடுதத்தங்களோ,' 'தவறான படைப்புக்களோ' முளைக்க இடந்தரல் கூடாது.

புதிய எண்ணங்களைத் தூண்டும் நாடகங்கள், மேதைகளின் வாழ்க்கை வரலாற்று நாடகங்கள், அறிவியற் கலைஞரின் வாழ்க்கை நாடகங்கள், வாழ்க்கைச் சிக்கலை **ஆராயும்** நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், கவிதை—இசை நாடகங்கள், பண்பாட்டு நாடகங்கள், உணர்ச்சி நாடகங்கள், கல்வி நாடகங்கள், வாழ்வியல் நாடகங்கள், மன்பதையியல் நாடகங்கள் ...எனப் பலதுறை நாடகங்கள் தமிழில் வளர வேண்டும்.

நாடகம் 'உணர்ச்சி வெறியோடு' இயங்கும் கலை. கதை ஓட்டமும், நிகழ்ச்சிப் பின்னலும் ஒன்றோடொன்று போட்டியிட்டபடி உணர்ச்சி வேகத்தைத் தூண்டிச் சுவைஞர்களை ஈர்த்துத் தனக்கு அடிமையாக்க வேண்டிய ஒப்பற்ற நுண்கலை நாடகம். அறிவாற்றலைத் தூண்டி ஆர்வத்தை வளர்க்கும் தலைசிறந்த கலை நாடக இலக்கியம்.

நாடகம் ஒரு பேராசிரியர். ஏன்? நாடகம் ஒரு பல்கலைக் கழகம். ஆகவேதான் காவியத்தோடு ஒத்த மதிப்புடையதாக நாடகம் சிறப்பிடம் பெறுகிறது.

சிறுகதை எழுதி விடலாம்; புதினம் வரையலாம்; கட்டுரைகள் தீட்டிவிடலாம்; கவிதைகள் இயற்றலாம் சற்று முயன்றால்; ஆனால்—பெருங்காப்பியமோ இலக்கியத் தகுதி மிக்க நாடகமோ எழுதுவது எளிதன்று; மிக மிக அரியது.

'நாடகம்' என்ற பெயரில் எழுதப்பட்டு, நடிக்கப்பட்டு, விளம்பரப்படுத்தப்பட்டு நாட்டில் உழல்வன வெல்லாம் உண்மை நாடகங்களுமல்ல; அவற்றை எழுதியோரும் கலையாற்றல் மிக்க நாடகாசிரியருமாகார். நாடகத்தின் வெற்றி எளிதில் அமைவதில்லை. மன்பதை மறுமலர்ச்சிக்கும், மக்கள்

எண்ணவளஎழுச்சிக்கும், உணர்வுப் பண்பாட்டுக்கும், அறிவுச் செம்மைக்கும், ஆர்வ எழுச்சிக்கும், புத்துணர்ச்சிக்கும் உதவும் நாடகங்களே வெற்றி நாடகங்களாகும். அத்தகு நாடகங்களை இயற்றியோரே உண்மை நாடகப் புலவராவர்.

தமிழ்த் தொகை இலக்கியங்களில் 'தலைவி கூற்று,' 'தலைவன் கூற்று,' 'தோழி கூற்று,' 'செவிலி கூற்று,' 'பாங்கன் கூற்று,' 'நற்றாய் கூற்று,'...முதலியன நாடக உரையாடல்களே. செய்யுள் உருவில் அவை அமைந்துள்ளமையே ஒரு வேற்றுமை. அப்பாடல்களில் நாடகப் பண்பும், நாடக உணர்வும், நாடக மரபும் நனி இலங்கக் காண்கிறோம். இந் நூற்களில் ஆழ்ந்தாழ்ந்து மூழ்கித் தெளிந்தவரே ஒப்பில்லா நாடகாசிரியராக முடியும்.

நீடூழி வாழும் நிகழ்ச்சிகளின் கோவையாக அமையும் கதையமைப்பைப் போற்றி நாடகத்தில் கையாள வேண்டும். கதையே இல்லாமல் சில உணர்ச்சி மிக்க—பண்பாடுள்ள—சுவை நிகழ்ச்சிகளை முறையாகத் தொகுத்துக் கோத்து நாடகமாக்கலாம்.—இனைய அடிப்படை (கதைக்கரு) உள்ள நாடகங்கள் இலக்கியத் தகுதியில் சிறப்பிடம் பெறும்.

நாடகங்களில் கதையுறுப்பினர்களின் 'பண்போவிய அமைப்புக்கு' முதன்மையான இடம் கொடுப்பது சிறந்த நாடகாசிரியர் இயல்பு. வேற்றுமைகள் ஒன்றற்கொன்று தெளிவாகத் தெரிகின்ற வகையில் பண்போவியம் உருவாக்கப் பட வேண்டும். பண்போவிய வேற்றுமையைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்காகச் சில கதையுறுப்பினரை 'இயற்கைத் தன்மைக்கு' மாறாகப் படைத்தல் கலைப் பண்பின் குறைபாடுடைய முயற்சியாகக் கருதப்படும். இத்தகு படைப்பை அறிஞர் போற்றிச் சுவைக்க மாட்டார்கள். நகைச்சுவை நாடகத்தில் திணிக்க வேண்டும் என்பதற்காக நடிகரின் இயற்கைப் பண்பாட்டை-இயல்புத் தன்மையைக்—கெடுப்பதோ, மிகைப் படுத்துவதோ 'கதைக்குரிய உணர்வைப்' பாழாக்கிவிடும். இலக்கியத் தகுதி உடைய எழுத்தை உருவாக்க விழையும் எழுத்தாளர்கள் தம் **'எண்ணும் ஆற்றலையும்,'** கற்பனை வளத்தையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். குறுகிய ஆவல்களுக்குக் கலையை-இலக்கியத்தை-இரையாக்கி, அழிவுவேலை செய்வது தகாத செயல் மட்டுமல்ல, இலக்கிய உலகக் குற்றமுமாகும்.

உணர்ச்சி மிக்க கதை கூட, நாடகமாக அமைக்கப்படும் போது, 'சற்று வேகம்' குறைவது உண்டு. உணர்வோட்டமும், உயிர்த்துடிப்பும், பண்போவியச் சிறப்புமுள்ள அழகிய புதினக் கதையை நாடகமாக்கிப் பார்க்கும்போது; புதினத்திலிருக்கும் துடிப்பும், உணர்ச்சியும், சுவையும் நாடகத்தில்

குறைந்திருப்பதைக் காணலாம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆயினும், சிறப்பான ஒருகாரணம் யாதெனில் நாடகம் குறிப்பிட்ட எல்லையில், வரையறையில் கட்டுப் பாட்டோடு சிறைப்படுத்தப் பட்டிருப்பதேயாம். இக்கட்டுப் பாடே நாடகத்தின் சிறப்பியல்புமாகும் என்பதையும் உணர வேண்டும்.

காலம், இடம், சூழ்நிலை, பின்னணி, முன்கதை, வருங்கால நிகழ்ச்சி, உய்த்துணரவேண்டிய செய்தி, கருத்து, உணர்வு— இதனிடையில் தொடர்பு அறுது ஊடாடும் உணர்ச்சிப் பின்னல்கள்—கருத்து மின்னல்கள், இத்தனைக்கும் உயிராக இணைந்து; தோன்றாத்துணையாக வளரும் 'கருத்தோட்டம்' அனைத்தும் நடிகரின் பேச்சாலேயே பெரிதும் சுவைஞர்க்கு விளக்கியுணர்த்த வேண்டியுள்ளது. குறிப்பாகவும்—சிறப் பாகவும் ஓரளவு நடிப்பால் இவற்றை உணர்த்தக் கூடும் எனினும்; காலம்—இடம்—சூழ்நிலை—எண்ணம் ஆகிய சிலவற்றைத் தெள்ளத் தெளிய விளக்குவது அரிதே. இவற்றை 'உரையாடல்' வாயிலாகவே நன்கு விளக்க முடியும். நடிக்கும் நாடகங்களில் மேடையில் ஒளி, ஒலி, ஓவிய அமைப்பு பின்னணி; கருவியிசை ஆகியவைகளாலும், வேறு பிற வாற்றானும் ஓரளவு விளக்கலாம் ஆனல் படிக்கும் நாடகத்தில் இது ஒரு குறையாகவே இருக்கும். இங்கேதான் நாடகாசிரி யனின் திறமைக்குத் தேர்வு அமைகிறது. கதையுறுப்பினரின் உரையாடல் வாயிலாகவே இக்குறையை நிறைவாக்கும் அருந் திறமை சீரிய நாடகாசிரியராலே மட்டுமே கையாளப்படும். இம்முறையில் எழுதப் பெற்ற நாடகம் அவ்வாசிரியரின் சிறப் பான எழுத்தாற்றலை நிலைநாட்டும் சான்ருகும். இம்முறை தோல்வியுற்ருல் அதனல் நாடகக் கதையில் உணர்ச்சி, நாடகப்பான்மை ஆகியவை சிதையும் எனவே, மிக்க விழிப் போடு எழுத்தாளர் இம்முறையைக் கையாள வேண்டும்.

நாடக உரையாடல், 'எளிய இனிய, தூய, உணர்ச்சிமிக்க —கொச்சையற்ற—இலக்கண வரம்புக்குட்பட்ட நடையிலும்; கதையுறுப்பினரின் இயல்புக்குப் பொருத்தமான வகையிலும் அமையவேண்டும். நடைமுறை வாழ்க்கையில் மக்களிர் சிலர் பேசும் பயனில் சொல், இழிசொல், கொச்சைமொழிகளை விலக்க வேண்டும்.—இனைய கருத்தை நன்கு கடைப்பிடிக்கும் நாடகாசிரியர் மொழித்துறைக்கு அரிய தொண்டு செய்த வராவார். உரையாடலின் மொழியமைப்பில் தெளிவும்— அழகும்—மிக இருக்க வேண்டும்.

கல்லாதவரும் சுவைத்துணர்வதற்காகவே நாடகக்கலை தோன்றியது. ஆகவே புரிந்து கொள்வதற்கு அரிய கருத்தையும், செய்தியையும் கூட எளிதில் புரிந்து

கொள்ளும்படி கதையையும், பாடலையும், நாடக அமைப்பையும் அமைக்க வேண்டும்.

தமிழ் நாடகங்களில் நிறைய **புது உவமைகள்** ஆளப்பட வேண்டும். புது உவமைகள் என்று ஏன் குறிப்பிடுகின்றேன் எனின், பழைய உவமைகளையே மீண்டும் மீண்டும் ஆளும் இரங்கத்தக்க நிலையைக்கண்டு நாடு சோர்ந்துபோயிருக்கிறது. அந்த நாட்டை விழிப்படையச் செய்யும் திறன் உடைய புதிய, அரிய, நல்லுவமைகள் ஆளப்பட்டால் பேரின்பம் நல்கும்.

பிறருடைய கருத்தையோ, உவமையையோ, கற்பனையையோ களவாடி எழுதுவதை விட எழுதாமல் இருப்பது அறங் கூறும் ஆக்கம் தரும். அவ்வாறு எடுத்தாள விழைந்தால், முதனூலாசிரியர் பெயரையும் குறிப்பிட்டே ஆளவேண்டும். இந்த '**இலக்கிய நாகரிகம்**' செழிக்க வேண்டும்.

இலக்கியத் தகுதி மிக்க நாடகங்களை உருவாக்குவதற்கு எழுத்தாளரின் ஆர்வமும், முயற்சியும், உழைப்பும் மட்டும் பெருகி வளர்ந்தால் போதாது. மக்களே பெரிதும் ஆர்வத்தோடு இலக்கிய வளம் மிக்க நாடகங்களை வரவேற்றுப் போற்றிப் பாராட்டும் அறிவுடைமை பெற வேண்டும்.

மக்களின் அறிவு வளத்தைப் பொருத்தே ஒருநாட்டின் கலைவளமும், மொழிவளமும், இலக்கியவளமும், பண்பாட்டு நாகரிக வளமும், வளரும் ; வாழும் ; செழிக்கும்.

மன்பதை வளர்ச்சிக்கும், பொருளியல் சீர்திருத்தத்துக்கும், அரசியல் வளத்துக்கும், சீர்திருத்த மறுமலர்ச்சிக்கும், புதுமை எழுச்சிக்கும், தொழிலியல் முன்னேற்றத்துக்கும், அறிவுச் செழுமைக்கும், ஒழுக்க உயர்வுக்கும், எண்ணும் ஆற்றலின் ஏற்றத்துக்கும், அகப்பண்பாட்டிற்கும், நட்புணர்வு முதிர்ச்சிக்கும், எழிற்சுவை துய்ப்பார்வத்துக்கும், கற்பனை வளமைக்கும்; வாழ்வின்பத்துக்கும், மன ஆறுதலுக்கும் அருமையான தொண்டாற்றுவது நாடகக்கலையே. அந்நாடகக் கலை வளமுற, நாடக இலக்கியம் செழிப்புற வேண்டும்.

நாடக இலக்கிய வளர்ச்சியே நாகரிக மலர்ச்சிக்கு வேர். —இவ்வுண்மையை உணர்ந்தத் தமிழ் நாடகாசிரியரின் படைப்புக்கள் 'நாடகத் தமிழ்த் துறையில்' சிறப்பான வாழ்வும் செல்வாக்கும் பெறும்.

மனிதனை 'மா மனிதனாக்கும்' நாடக இலக்கியம், உலக இலக்கியத் தகுதி பெற்றுயர ஆவன செய்யக் கலைஞரோடு— பொதுமக்களும், சுவைஞரும் ஒத்துழைக்க விழித்தெழுதல் நலம் பயக்கும் !

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனார்,
தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(உரிமை ஆசிரியருக்கு)

1. புதுமை உலகம் :

உலகம் முழுவதும் அமைந்து விளங்கும் இயற்கையின் வனப்பில் ஓர் நிலைப்பு ஏற்படுங்காலத்தில் புதுமை பிறக்கிறது. அப்புதுமை மனிதனுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் அரிதாக அமைந்து ஆராவியப்பினை விளைக்கின்றபோது விந்தைப் பொருளாகின்றது. இதனையே அதிசயம் என்றும் அழைப்பர்.

விண்ணும் மண்ணும் மலையும் கடலும் விளைவிக்கும் இயற்கை விந்தைகளும், ஆறறிவு என்னும் புலத்தில் மனிதன் அரிதாக முயன்று அருமையாய் வளர்த்த கலைச்சின்னங்களாம் செயற்கை விந்தைகளும், வண்ண மகளின் எழிலை வளர்க்கும் பொன் அணிகளைப்போல் இயற்கையில் செயற்கை இயைந்து மிளிரும் விந்தைப் பொருள்களும் உலகில் உண்டு.

கை புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாய் விண் தொட நிவந்த வெற்பாம் இமயம் ஒரு விந்தை; அதன் உச்சியில் நின்று மண்ணக மகளின் மாண்பினைக் கண்டுப் பெருமிதம் கொண்ட மனிதன் செய்த மாண்புறு செயலும் ஒரு புதிய விந்தை. கன்னிமுனையில் நிற்கும் கற்பாறையெனும் காதலனைத் திரைக்கைகளால் அணைத்து எழுந்து திகைத்து நின்று ஆர்ப்பரிக்கும் ஆழ்கடல்களாம் மங்கையரின் காதற் போராட்டமும் ஒரு தெவிட்டாத விந்தை. எண்ணரிய பாறைகள் உடல்பெற்று உயிர்பெற்றனபோல் எழுந்து நிற்கும் உளிவன்மையின் ஒப்பிலா வரலாற்றை உரைக்கும் மாமல்லபுரமும் ஒரு நிலைத்த விந்தை. மஞ்சுதவழ் குன்றென தஞ்சையில் எழுந்து நிற்கும் இராசராசேசுவரமும் ஒரு கைபுனைந்தியற்றிய விந்தைப் பொருளேயாம். இன்னும் எத்தனையோ விந்தைப் பொருள்கள் உலகில் இருந்தன. அவை காலவெள்ளத்தால் கரைந்தொழிந்தன. எஞ்சி நிற்பனவற்றுள் இந்தியப்பெருநாட்டில் வளர்ந்து நிற்கும் குன்றும் குகையும் கோயிலும் பழமை பேசும் புதுமைகளும் உண்டு. இத்தகைய புதுமைகளின் வழியே பழமையை உணரும் பொற்பால், 'மனிதன் எப்படி வாழ்ந்தான், என்ன

செய்தான் என்னும் வினக்களுக்கு விடை கிடைக்கின்றன. அதுவே வரலாறென்னும் பெருநெறியாக அறிவுலகில் ஆராய்ச்சியின் பயனைய் வளர்ந்து வருகிறது.

2. நாகரிக வளர்ச்சி:

ஆதிமனிதன் குகைகளிலும் குன்றுகளிலும் காடுகளிலும் விலங்கினம்போல் வாழ்ந்தான். சூழ்ந்திருந்த இயற்கையின் நிகழ்ச்சிகளான பெருவெள்ளமும், பேரிடியும், காட்டுத்தீயும், கடுங்காற்றும், மாற்றத்தால் மாயம் விளைக்கும் மண்ணும், பரந்துயர்ந்த விண்ணும், விண்ணிலே ஒளிரும் கதிரும்; அவற்றைச் சூழ்ந்து எண்ணரிய காட்சிகளோடு மாட்சியாய்த் திரிதரும் எழிலின் தோற்றமும் அவனுடைய சிந்தனைக்கு விந்தைகளாயின. விந்தைகளில் சிந்தனையைச் செலுத்திய உணர்வே வழிபாடு என்னும் பழக்கத்திற்கு வழிவகுத்தது. அவ்வழியே தீயையும் காற்றையும் மண்ணையும் மலையையும் தெய்வமாக்கினன். தெய்வத் தன்மையொடு வழிபாடு ஒன்றி இயக்கமுற்ற பொழுதே கல்லும் மண்ணும் மரமும் கருத்தால் உருப்பெற்றன. சுண்ணமும் வண்ணமும் சுவர்க்கோலமாயின. செய்த சிற்பத்திலும் வரைந்த சித்திரத்திலும் திளைத்த மனிதன் குதித்தாடினன். மகிழ்ச்சி ஒலிகளை மாண்புற இசைத் தொலித்தான். எனவே கூடிப்பிறந்தன கூத்தும் பாட்டும். காலச்சகடம் உருண்டது. கலைகள் வளர்ந்தன. நாகரிகப் பாதை அமைந்தது.

3. கலைகளின் சிறப்பு:

நாகரிகக் கலைகள், உண்டாக்கும் கலைஞனின் உள்ள உணர்ச்சி எந்த அளவு சிறந்து விளங்குகின்றதோ அதற்குச் சான்றாகவே தோற்றங்கொள்ளும். அகத்தே எழும் உணர்ச்சியினால் உருவாக்கப்பெற்ற அழகினையே ஒரு நல்லிசைப் புலவன் காவியமாக்குகிறான். சிற்பி சிற்றுளி கொண்டு கற்களில் செதுக்கிச் சிலையாக்குகிறான். ஓவியன் தூரிகை கொண்டு சுவரிலோ கிழியிலோ எழுதி உருவினைத் துலங்கச்செய்கிறான். இசைவாணன் இதயம் உருகப் பண்ணுடன் பாடுகிறான். கூத்தன் மெய்ப்பாட்டின் வழியே மென்மையாக அழகு செய்து காட்டுகிறான். இவ்வாறு உள்ளப்பண்பால் உயர்ந்தோங்கி நிற்கும் கலைகள் நான்கனுள், அழகுக்கலையாய் நின்று சென்ற கால மனிதன் செய்த திறனைக் காட்டும் சிறப்புடையன சிற்பமும் ஓவியமுமேயாம்.

இயற்கையில் கண்டவற்றையும், கற்பனையில் எழுந்தவற்றையும் ஓவியமாகவும் சிற்பமாகவும் ஆக்கிய கலைஞர்,

தமது திறனைத் தாமே கண்டு மகிழ்ந்திடும் சிறப்பு இவ்விரு கலைகளுக்கே இயல்பாம். இணைந்த பண்புடைய இக்கலைகள் எழிலோடு உயிர்ப்புள்ளதாக அமைந்ததற் குரிய உண்மையும் உண்டு.

சிற்பி, தாம் ஓர் உருவைச் சிலையில் செதுக்குமுன், அவ்வுருவத்தின் அமைப்பினை உள்ளத்தே அமைத்துப் பன்னெடு நாட்கள் உருவகிப்பான். அப்பொழுது அவனுள் ளத்தே அவ்வுரு உருவாகும். உள்ளத்தே தெளிவாக அமைந்த அதனை, சிற்பிதன் கைத்திறனால் வளர்த்து, காண்போருடைய உள்ளத்தைக் கவரும் உயிர்ப்புடன் விளங்கச் செய்வான். இவ்வாறு சிற்பக்கலை செழித்துயர்ந்ததைப் போன்றே ஓவியக் கலைஞரின் உள்ளத் தெளிவாலும், கற்பனையின் திறத்தாலும், இயற்கை வண்ணங்களின் எழிலாலும் ஓவியக்கலை உயர்ந்தது. எனவே, எண்ணற்ற சிற்ப ஓவியங்கள் இந்திய நாடெங்கு முள்ள குகைகளிலும், சமண பௌத்த பள்ளிகளிலும், கோயில் களிலும், மண்டபங்களிலும் உருவாகி நிற்கின்றன.

4. கலைகளின் அழிவு:

சிற்பமும் ஓவியமும் மக்களின் தெய்வ வழிபாட்டிலேயே உலகம் முழுவதும் சிறந்து வளர்ந்தன எனலாம். அத்துடன் மன்னரும் செல்வரும் சிற்பவோவியக் கலைஞரைப் பெரிதும் சிறப்புச் செய்து வாழ்வித்தனர். எனவே வானளாவிய கோயில்களும், சிற்பவோவியங்களும் நாடெங்கும் பெருகின. இந்தியப் பெருநாட்டிலும் இம் முறையிலேயே இக் கலைகள் மிகுதியாக வளர்க்கப்பட்டன. இந்நிலையில், இந்திய நாட்டினுள் உருவ வழிபாட்டை வெறுத்துரைக்கும் கொள்கையுடைய சமய வெறியர்கள் அலை அலையாய்ப் புகுவா ராயினர். அவர்களுடைய கொடிய பார்வையில் சிக்குண்ட தங்கச் சிலைகள் தகர்ந்தன. அவர்களுடைய அறிவற்ற கைகள் சிற்ப இலக்கணத்தால் சிறந்திருந்த கற்சிலைகளின் மூக்கைச் சிதைத்தன; திரண்டு நீண்ட கைகால்களை முறித்தன. சுருங்கக் கூறின், அச் சிற்பந்தாக்கிகளின் அடாத செயலுக்கு இலக்காகாத பெருங்கோயில்கள் இந்தியா முழுவதும் இல்லை யென்றாயிற்று. அத்துடன் நின்றதா கலையழிவு! அடுத்து நாட்டிற் புகுந்த ஐரோப்பியர், அதிகாரத்தாலும் ஆணவத் தாலும் ஆடவல்லான்போன்ற அழகிய சிற்பங்களையும் சிறந்த ஓவியங்களையும் எடுத்துச் சென்றனர். இஞ்ஞான்று அவைகள் இங்கிலாந்து பிரான்சு செர்மனி உருசியா ஆகிய நாடுகளில் உள்ள காட்சிசாலைகளிலும், செல்வரின் மாளிகைகளிலும் அழகுப் பொருள்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சமயவெறிச் சூறுவளிக்கும், ஐரோப்பியரின் ஆசைக்கும் இலக்காயின்றொழிய, இன்று எஞ்சி நின்று இந்திய நாட்டின் கலைச் சுரங்கங்களாக விளங்குவன, காந்தாரம் வடமதுரை சாஞ்சி சாரநாத் அமராவதி முதலிய இடங்களில் கிடைத்த கருங்கற் சிலைகளும், அஜந்தா எல்லோரா சிற்றண்ணல்வாயில் மாமல்லபுரம் தஞ்சை தென்காசி ஆகிய இடங்களில் காணப்படுகின்ற உயர்ந்த வேலைப்பாடுடைய குடைவரைகளும் கோயில்களும் ஓவிய சிற்பங்களும் கலைத்துறை வல்லோரால் பெரிதும் போற்றப்படுவனவாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இவ்வருங் கலைகள் செந்தமிழ் நாட்டில் சிறந்திருந்தன. இவ்வுண்மையை

'வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம்.' என மணிமேகலையிற் கூறுவதற்கு விளக்கந் தருவதைப் போன்று,

'வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்'

என்று, 'நெடுநல்வாடை'யினுள் கூறப்பெறுதலினால், பண்டைத் தமிழகத்தில் மக்கள் வெள்ளிய சுண்ணத்தால் சுவரை விளங்கச் செய்து, அதன் மீது வண்ணத்தால் பல் வகைக் கொடிகளை எழுதி இல்லத்தினை அழகுபடுத்தி வாழ்ந்தனர் என்பதும் புலனாகின்றது. இத்தகைய கொடி வேலைப்பாட்டினை, இன்று ஓவியத் துறையில் ஒருசார் உயர்ந்த பாங்குடைய 'கொடிக்கருக்கு ஓவியம்' (Design) என்பர்.

மற்றும், கண்ணுள் வினைஞர், மண்ணீட்டாளர் என்று கூறப்பெறும் ஓவியக் கலைஞரும், சுதை வேலைக்காரரும் மருவூர்ப்பாக்கத்தில் வாழ்ந்தனர் என்பதுடன், பாவைமன்றமும் பாங்குடன் நின்ற சிறப்பினைச் சிலப்பதிகாரம் சிறப்புற உரைக்கின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக, 'கொல்லிப் பாவை' என்னும் நல்லியல் பொருந்திய பாவையும் தமிழகச் சிற்பியால் உயிர்ப்புடன் செய்தமைக்கப்பட்டிருந்ததனைச் சங்க இலக்கியங்கள் ஆங்காங்கு சாற்றுகின்றன.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி :

பழந் தமிழர் கல்வி வரலாறு (4)

கு. சிவமணி எம். ஏ., பி. டி.
தமிழ்த்துறை, அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமரபாளையம்.

(உ) பொருள் : உயிர்க்கு உறுதுணை பயக்கக் கூடியன வற்றைப் பொருள் என்று பொதுவாக உரைப்பினும் சிறப் பாகச் செல்வத்தையே அது குறிக்கும். ஏனெனில் செல்வம் எல்லா நலங்களையும் நல்கவல்லது. அச் செல்வம் பலவகைப் படுமாயினும் அதனை இரு பெரும் பிரிவுகளிலே திருவள்ளுவர் அடக்கிக் காட்டுவர்; ஒன்று அருட்செல்வம்; மற்றொன்று பொருட் செல்வம்.1 அருள் பெறுதல் அரிது; பொருள் பெறுதல் முயற்சியுடையார்க்கு எளிது; அருள் உயர்ந்தோர் மாட்டே நிகழும்; பொருள் எல்லோரிடத்தும் இருக்கும்.

உலகிலே உயர்ந்த வாழ்க்கையை வாழ விரும்பு கின்றீர்களா? என்ற வினவை நம்முன் படைக்கின்றார் திரு வள்ளுவர். "ஆம்" என்ற விடையை நாம் தருவோம். அப்படி யென்றால் வாழ்க்கை வேண்டும் என்று வேண்டுகின்றோர்க்கு ஒன்று வேண்டும். அவர் கல்வியிற் சிறந்தவராக இருக்கலாம்; அறிவுடைய சான்றோராக இருக்கலாம்; அமைதியே குடி கொண்ட உருவினராகத் தோன்றலாம்; ஆர்ந்த புகழுடைய வராகப் போற்றப் பெறலாம்; நுண்மாண் நுழைபுலமும், கேளாரும் வேட்ப மொழியும் திறனும், எண்ணிலடங்கா நல்லி யல்புகளும் பெற்றவராகத் திகழலாம்; இவையெல்லாம் இருந்தும் அவர் இல்லாதவரே! இவையனைத்தும் இல்லாம லிருப்பினும் பொருள் மட்டும் உள்ளவர் உள்ளவரே! அவருக்கே இவ்வுலகம் உண்டு; உலக நலங்கள் உண்டு; வளமையான வாழ்வும் உண்டு. இவ்வுலக வாழ்விற்குப் பொருள் இன்றி யமையாது வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவனார் பொன்மொழி.2

இவ்வுலகினை நாடக அரங்கிற்கு ஒப்பிட்டுக் கவிஞர் பெரு மக்கள் காட்டுவர். அந் நாடக அரங்கிற்கு வருகின்ற மக்கள் கூட்டத்தோடு செல்வத்தை ஒப்பிடுகின்றார் திருவள்ளுவர். அரங்கம், மக்கள் நெருக்கத்தால் சிலவேளை நிரம்பி வழியும். பல நேரங்களில் கூட்டமே இல்லாது ஒழியும். அதேபோன்று சில நேரங்களில் செல்வம் சிலரைச் சார்ந்திருக்கும்; நிலை

---

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. குறள் —241

2. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

பெறும். செல்வத்தைச் சேர நினைப்பவர்களைச் சேராமல் அது விலகித் தொலைவில் ஓடும். பொருட் செல்வம் நிலைமாறும் இயல்பினது.3 செல்வம் இன்னார் இனியார் என்ற வேறு பாடின்றி வகுத்தான் வகுத்த வகையில் சென்றடையும். ஆயினும் அதைப் போற்றிப் பேணுகின்றவரிடம் அது தங்கும். பெரும் பொருள் பெற்றவர்கள், அதைப் பேணிப் போற்ருமையால் வறுமையுற்று வாடுதலையும், பொருளற்ற வறுமை நிலையில் வாழ்வைத் தொடங்கியவர்கள் ஆகூழ் கூட்டும் அசைவின்மையால் பெரும் பொருள் பெற்று வாழ்வாங்கு வாழுதலையும் உலகியலில் நாம் கண்கூடாகக் காண்கின்ரும். நிலையற்ற பொருளை நிலைபெறச் செய்வதே அறிவுடைமையாகும். அந்நிலை பேறுடைமை அற வடிவிலும் மிளிரலாம்.

இல்லறம் நல்லறமாக இலங்குதற்குப் பொருள் மிகவும் இன்றியமையாதது. களவுக் காலத்தும் கற்பின் கண்ணும் பொருள்வயிற்பிரிவைப் பழந் தமிழர்கள் மேற்கொண்டமையைச் சங்கப் பாக்கள் சாற்றுகின்றன. அப்பாடல் தலைமக்களுள் ஒருவன் பொருளின் சிறப்பைப் பெருமை தோன்றப் புலப்படுத்துகின்ருன். அத் தலைவனின் காதல் நெஞ்சம் தலைவியுடனேயே இருக்க வற்புறுத்துகின்றது. அவனது கடமை நெஞ்சம் பொருளீட்டத் தூண்டுகின்றது. இரு நெஞ்சிற்குமிடையே எழுந்த போரில் கடமை நெஞ்சம் வெல்கின்றது. அவன் தலைவியைப் பிரிந்து பொருள்தேட வேற்று நாடு செல்கின்ருன். சென்றவன் நெடுநாட்களுக்குப் பின்னரும் திரும்பாமை கண்டு தோழி அலுத்துக் கொள்கிருள். அப்போது தலைவி தலைவனது கடமையுணர்வைப் பாராட்டிப் பேசுகிருள். தோழி! இல்வாழ்க்கை சிறக்க வேண்டுமாயின் இரு இயல்புகள் வேண்டும். அறத்தோடு பொருந்திய வாழ்க்கையாக அது அமைய வேண்டும். மேலும் பெருவளம் வேண்டும்; பிறர் வாயிலில் சென்று பொருள் இரவாதிருக்கும் அளவிற்குப் பெருவளம் வேண்டும். அறத்தினின்றும் நீங்காத நல்வாழ்க்கையையும் பிறரிடம் இறவாதிருக்கும் பெருவளத்தையும் பொருளே தரவல்லது. என்று கூறிய நம் தலைவர் வினைமேற் சென்ருர். காதல் நோயால் நாம் துன்புறினும் நம் தலைவர் செய்வினையை முடிப்பாராக! என்று அழகுற அத் தலைவி கூறுகின்ருள்.4

---

3. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. குறள் 332

4. " அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன் கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளி னுகும் புனையிழை " என்றுநம்
இருளேர் ஐம்பால் நீவி யோரே,
நோய்நாம் உழக்குவ மாயினும் தாம்தம்
செய்வினை முடிக்க; தோழி! —அகநானூறு 155:1-6

பொருளைப் பெற்றுவிடின் ஏனைய அறமும் இன்பமும் தாமே வந்து அமையும். ஆகவே பொருளை முயற்சியுடன் செய்ய வேண்டும். பொருள் இருப்பின் ஏனைய இரண்டும் அடைவதற்கு எளியனவாம்.5 பொருள் செயல்வகை பல திறப்படும், முயன்று ஈட்டல் ஒருவகை: முயற்சியின்றி அடைதல் பிறிதொருவகை; பொருளைச் செய்யும்போது மற்றவர்களுக்கு இழப்பேதும் வாராமல் கொள்ளுதலும் உண்டு; மற்றவரை அழித்து அதன் வழியே ஆக்கத்தைப் பெறுவதும் உண்டு. அறநெறியிலும் பொருளீட்ட இயலும்; மறநெறியில் பொருள் கவர்தலும் கூடும். தீதின்றிச் சேர்த்த பொருளே ஒருவற்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்க வல்லது.6 வஞ்சனையான வழிகளில் பொருளை நாடுதல் கூடாது. அப் பொருளைச் சேர்த்துக் காத்தலும் கூடாது. அது ஈரமண்கலந்துள்ளே நீரைவிட்டுக் காத்தலைப் போலாகும்.7

அன்பு பெரும்பாலும் எல்லோரிடத்தும் அரும்பும்; அருள் சிலரிடத்தே மட்டும் பூக்கும். அன்பு நெஞ்சம் அவர்களுக்கு முண்டு; அருள் நெஞ்சம் சிலருக்கே உண்டு. அன்பு நெஞ்சின் முதிர்ச்சியில் அருளுடைமை மலருகின்றது. ஆகவே அன்பு, தாய்: அருள் அன்பு பெற்றெடுத்த அருமைக் குழந்தை; அன்பின் குழவியாகிய அருள் என்னும் குழந்தையைப் பொருள் என்னும் செல்வச் செவிலி போற்றி வளர்க்கின்ருள்; குழந்தை வளருகிறது. இக் கருத்தைக் கவினுற வள்ளுவர் வலியுறுத்துகின்ருர்.8

சிலவற்றிற்காகச்சிலரைமக்கள் மதிக்கின்றனர். புலவரைப் புலமைக்காகப் போற்றுகின்றனர்; கலை வல்லாரை அவர்தம் கலை நுட்பத்திற்காகப் பாராட்டுகின்றனர்; அறிவு நலம் வாய்க்கப் பெற்ருரை அறிவுடைமைக்காகப் பெரிதும் கொண்டாடுகின்றனர். இவற்றில் ஏதுமின்றிப் பொருளொன்றே பெற்றவரை எல்லோரும் போற்றிச் சிறப்புச் செய்கின்றனர். மற்றையன பெற்றிருந்தும் பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழுவர்.9 ஏனென்ருல் பொருளால் முடியாத பொருள்

---

5. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு. — குறள் 760
6. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து தீதின்றி வந்த பொருள் — ,, 754
7. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட் கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று — ,, 660
8. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் செல்வச் செவிலியால் உண்டு — ,, 757
9. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு — ,, 752

ஒன்றுமில்லை. மதிப்பில்லாதவரையும் மதிக்கப்படுபவராகச் செய்யும் ஆற்றல் பொருளுக்கே உண்டு. அப் பொருளன்றி வேறு பொருள் இல்லை.10 பொருள் அணையாத விளக்காகும். அது என்றும் மங்காமல் ஒளிவிடுவது; அதனை ஒருவர் கைக் கொண்டால் அவர் நினைத்த இடத்திற்குச் சென்று அங்கு நிறைந்துள்ள இருளை அது அகற்றும்.11 ஆகவே தமக்கு ஆக்கம் விரும்புவார் பொருளைச் செய்ய வேண்டும்.

பொருள் பலரையும் சென்றடைகின்றது. பொருள் பெற்றாரெல்லாம் அருள் பெற்றார் என்று மொழிதல் இயலாது. கன்னத்தை அடித்து உடைக்கின்றவரைத் தவிர மற்றவர்க்கு எச்சில் உண்ட கையையும் உதறமாட்டாத கயவரிடமும் பொருள் நிலைக்கிறது.12 உலகம் வாழ வேண்டும் என விரும்பும் பேரறிஞனின் செல்வம் நீர்நிரம்பிய ஊருணிபோல் அனைவர்க்கும் பயன்படுகின்றது.13 நயனுடையானின் செல்வம் உள்ளூர்க்கண் பழுத்த பயன்மிகும் மரத்தைப்போன்று எல்லார்க்கும் உதவுகின்றது.14 பெருந்தகைமையுடையானிடம் உள்ள செல்வம் எல்லாப் பகுதிகளும் மருந்தாகிப் பயன் தவறாத மரம்போன்ற தன்மையுடையது.15

பொருள் மிகுதியாகச் சேர்ந்தது. அப்பொருளைவைத்து என்ன செய்வது? அப்பொருளை அறவழியிற் செலவிடுதல் வேண்டும். முயன்று சேர்த்த பொருளையெல்லாம் தகுந்தவர்களுக்கு உதவ வேண்டும்.16 அதுவே செல்வத்தின் சிறப்பாகும். செல்வத்தின் பயனுக நக்கிரனார் அறிவுறுத்திய கருத்தும் ஈண்டு நினைத்தற்குரியது.

---

10. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் — குறள் 751

11. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று — ,, 753

12. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு — ,, 1077

13. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு — ,, 215

14. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் — ,, 216

15. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். — ,, 217

16. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு — ,, 212

"உலகம் பொதுமையின்றி ஒரேகுடைக்கீழ் கொணர்ந்த பேரரசருக்கும், இரவும் பகலும் தூங்காமல் விலங்குகளை வேட்டையாடக்காத்திருக்கும் கல்லாதவருக்கும், உண்ணப் படும் பொருள் நாழிஅளவே! உடுக்கப்படும் ஆடைஇரண்டே! பிறதேவைகளும் ஒத்தன. அதனால் செல்வத்துப் பயனாவது வறியார்க்கு உவந்துகொடுத்தலாகும். யாமே துய்ப்போம் என்றாலோ, அவ்வாறு துய்க்காமல் தவறிய வாழ்வுகள் பலவாகும்.''17

என்று அவர் புறப்பாடலில் அழகுற விளக்கியுள்ளார்.

பழந் தமிழர் வாழ்வியலில் சில அடிப்படையான நெறிகளைப் போற்றினர். பொருளின் பெரும் சிறப்பை உணர்ந்தனர்; அதனை மிகுதியும் ஈட்டினர்; ஈட்டிய பொருளால் அறவினை மேற்கொண்டனர்; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்புடையாராகத் திகழ்ந்தனர். கொடு என்று கேட்டுப் பெறுவதை இழிவாகக் கருதினர். கேட்டும் கொடுக்க மாட்டேன் என்பதை அதனினும் இழிவாகக் கருதினர். குறிப்பறிந்து கொள் என்று கொடுத்தலை உயர்வாகப் போற்றினர். அதற்கு மாறாகக் கொடுப்பதைக் கொள்ள மாட்டேன் என்று பெருமிதம் தோன்றச் சொல்வதை மிகவும் உயர்வாகப் போற்றினர்.18

வையத்துள் வாழ்வாங்கு வாழப் பெரும் பொருளைப் பழந் தமிழர் குவித்தனர். மும்முதற் பொருளில் நடுவணதாகிய பொருள்; பொருள் இயல்பு, பொருள் ஆக்கம்; பொருளின் பயன் முதலிய கூறுகளை அறிவுறுத்த வல்லதாகப் பழந் தமிழர் கல்வி அமைந்திருந்தது.

(தொடரும்)

---

17. தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே!
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே!
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே! —புறநானூறு 189

18. ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று ,, 204

கையறவு

1

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினரும் அறிவியல் வல்லுநரும் அனைத்திந்திய வானொலி நிலையத்தின் சிறந்த பொறிவலருமான திரு. **தி. இராசமாணிக்கம்** அவர்கள் தமது 48-ஆம் அகவையில் மார்படைப் பினால் 5–5–61-ஆம் நாள் தில்லியில் மறைந்தமை கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

இவர், நம் சங்கத்தின் ஆயுளுறுப்பினராக இருந்து சிறந்த சொல் லாய்வுக் கட்டுரைகள் எழுதிய அறிஞர், டாக்டர் கோ. தியாகராச பிள்ளை (ஈப்போ) அவர்களின் முதல் மகனுவார். மலேயாவில் 16 ஆண்டு வரை பயின்று பின்னர் சென்னை மாநிலக்கல்லூரியில் கலைஞர் பட்டம் பெற்றுப் பெங்களூர் விஞ்ஞானக் கல்வி மன்றத்தில் மூன்றாண்டுகள் மின்னியல் துறையிலும் சிறப்பாக ஒலிபரப்புப் பொறிக் கலையிலும் தேர்ச்சியுற்றார். எல்லாத் தேர்வுகளிலும் முதல் வகுப்பிலேயே சிறப் பாகத்தேறும் நுண்ணறிவாளரான இவரை அனைத்திந்திய வானொலி நிலையம் ஒரு பொறிவலராகப் பெற்றுச் சிறந்தது.

உழைப்பாலும் ஊக்கத்தாலும் உயர் பதவி பெற்றுச் சிறந்த இவர் இந்திய வானொலி வளர்ச்சிகருதித் தீட்டும் பெருந்திட்டங்களைச் சிறப்புறச் செய்ய, மேற்கே அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கும் கிழக்கே சப்பானிய நாட்டிற்கும் சென்று பெருந் திறமை பெற்று நிபுணராக வந்து பெரும்பணியாற்றினார். அண்மையில் இந்திய அரசின் தொலைக் காட்சி (டெலிவிஷன்) திட்டத்தைத் தொடங்கி வைத்து வெற்றி கண்டார்.

சிறந்த பண்பும் நிறைந்த கல்வியும் அன்பும் நட்பும் ஆற்றலும் சான்ற தமிழ் மகனை விஞ்ஞானக் கலை அறிஞனை நாடு இழந்தது ஈடு செய்ய வியலாததொன்றாம்.

இத்தகு தலைவனைப் பிரிந்து வருந்தும் அவரின் துணைவியார் பதுமா வதியம்மைக்கும் சிறிய தந்தையும் நம் சங்க உறுப்பினருமான திரு. கோ. வன்மீகநாதனார்க்கும் அவர் தம் குடும்பத்தார்க்கும் உறவினர்க்கும் சங்கம் ஆறுதல் கூறித்தன் ஆழ்ந்த துயரையும் தெரிவித்துக்கொள்ளு கிறது.

— பொழிற்றொண்டர்.

2

நம் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரும் கரந்தை வணிகரும் நிலக் கிழாருமான திரு. வ. ம. துரைராசு பிள்ளையவர்கள் 15–4–61-ஆம் நாள் இயற்கை எய்தியமையறிந்து வருந்துகிறோம். அவர் தம் உறவினருக்கும் நண்பர்கட்கும் குடும்பத்தார்க்கும் எங்கள் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

— பொழிற்றொண்டர்.

திரு. அ. சாம்பசிவம் பிள்ளை அவர்கள்



[பக்கம் 95.]